# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8075865

C

1. District : Thiruvallur. மாவட்டம் PS: Vigilance & Anti Corruption காவல்நிலையம் Year: 2022 ஆண்டு FIR No.: 01/AC/2022/TVL மு.த.அ. எண் Date: நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 27.01.22 Date to : நாள் வரை at 11.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 01.02.22 Time to : நேரம் வரை at 12.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.02.2022 Time நேரம் at 09.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.02.2022 Time நேரம் at 09.30 hrs & 10.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South West. About 10 km.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி office of the Assistant Engineer TANGEDCO. Perambakkam Thiruvallur Dist.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. S. Sasikumar (b) Father's/ ~~Husband's~~ Name : தந்தை / கணவர் பெயர் Tr. Somanathan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு age 29/22 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -
Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி No. 255, Poonthotta Nagar Kakkadur village. Thiruvallur Dist

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Sivakumar. Commercial Inspector O/o The Assistant Engineer. TANGEDCO. Perambakkam Thiruvallur Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

Seen [illegible] 5/2/22
Seen 5/2/22

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demand bribe amount Rs. 3000/.

10. Total value of properties stolen / involved —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS VBAC. Kanchipuram. I/c Thiruvallur. on point of jurisdiction.
எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................................... பதவி .............................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
முதஅ குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. [signature] 3/2/22
Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 3/2/2022
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.02.2022 at 12.50 hrs.

Name பெயர் G. ANNADURAI
Rank நிலை Inspector
VBAC. Kanchipuram.
I/c Thiruvallur.

**(Contents of the F.I.R. in Thiruvallur V&AC, Cr.No.01/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

அனுப்புநர், S.சசிகுமார், ஆ/வ.29, த/பெ.சோமநாதன், எண்.255, பூந்தோட்ட நகர், காக்களூர் கிராமம், திருவள்ளூர் தாலுக்கா & மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது தாய் தந்தையருடன் குடியிருந்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்கள், அவர்கள் இருவருக்கும் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகிறார்கள். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான் டிப்ளோமா வரை படித்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்து வீடு கட்டும் பணியால் நின்றுவிட்டேன். நான் கடந்த 2020-ம் ஆண்டு, திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள மப்பேடு கிராமத்தில் அமைந்துள்ள ஸ்மார்ட் சிட்டியில் பிளாட் எண்.13, சர்வே எண். 361/1F1A1, 361/1B1 (DTCP Approval No.178 (R))-ல் 956 சதுரடி பரப்பளவுக்கொண்ட விட்டுமனையை ரூ.2,58,129/-க்கு உளுந்தை கிராமத்தைச் சேர்ந்த திரு.அன்பழகன் என்பவரிடமிருந்து என் பெயரில் வாங்கி பேரம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2048/2020, நாள்.27.10.2020 ஆக பதிவு செய்தேன். பிறகு அந்த மனைக்கு பட்டா எண். 3730 வாங்கினேன். மேற்படி விட்டுமனையை எனக்கு விற்பனை செய்த திரு.அன்பழகன் அவர்கள் ஏற்கனவே அந்த மனைக்கு ஒரு முனை மின்இணைப்பு (Single Phase Commercial Tariff) வாங்கி வைத்திருந்தார். அந்த மின் இணைப்பு எண். 545-001-2345 வாங்கி வைத்திருந்தார். மேற்படி மனையில் நான் தரை தளத்தில் இரண்டு குடியிருப்புகளும், முதல் தளத்தில் இரண்டு குடியிருப்புகளும் உள்ளவாறு புதிய வீட்டினை கட்டியுள்ளேன். அதற்கு தனித்தனியாக நான்கு புதிய ஒரு முனை (Single Phase) மின் இணைப்பு பெறுவதற்காக பேரம்பாக்கம் மின்சார அலுவலகத்தில் வணிக ஆய்வாளராக பணிபுரியும் திரு.சிவக்குமார் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து மின் இணைப்பு பெறுவது சம்பந்தமாக கேட்டபோது, அவர் என்னிடம் புதியதாக மின் இணைப்புக்கோரி முதலில் ஒரு விண்ணப்பத்தினை ஆன்-லைன் மூலம் விண்ணப்பிக்குமாறு கூறினார். அதன்படி, நான் கடந்த 12.01.2022-ம் தேதி ஆன்-லைன் மூலம் மேற்படி வீட்டிற்கு மின் இணைப்புக்கோரி விண்ணப்பம் பதிவு செய்தேன். அதன் பின்னர் நான் கடந்த 27.01.2022 ஆம்தேதி பகல் சுமார் 11.00 மணிக்கு பேரம்பாக்கம் சென்று மின்சார அலுவலகத்தில் வணிக ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்களை சந்தித்து தாங்கள் தெரிவித்தப்படி, ஆன்-லைன் மூலமாக மின்இணைப்புக்கோரி மனு செய்திருந்த விவரத்தை தெரிவித்தேன். Application Reference No.20009545012210). அதற்கு மேற்படி வணிக ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்கள் முதலில் அரசுக்கு ஒரு மின்இணைப்புக்கு செலுத்தவேண்டிய ஆன்-லைன் கட்டணம் ரூ.2,818/- ஐ செலுத்திவிடுமாறும், மேலும் தனக்கு தனியாக ரூ.6,000/- தரவேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் உடனடியாக அவ்வளவு

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

பணம் என்னிடம் இல்லை என்று தெரிவித்துவிட்டு ஆன்-லைன் கட்டணம் ரூ.2,818/-யை மட்டும் ஆன்-லைன் மூலம் செலுத்தினேன். பின்பு கடந்த 01.02.2022-ம் தேதி நான் மேற்படி மனையில் புதியதாக கட்டியுள்ள வீட்டிற்கு மேலும் மூன்று புதிய மின் இணைப்புகளை பெருவதற்காக மூன்று விண்ணப்பங்களை ஆன்-லைன் மூலம் பதிவு செய்தேன். அந்த Application References No.20009545022234. No.20009545022235. No.20009545022236 ஆகும். அதன் பின்னர் அன்றே (01.02.2022) பகல் சுமார் 12.30 மணியளவில் பேரம்பாக்கம் மின் அலுவலகம் சென்று மீண்டும் வணிக ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்களை சந்தித்து. தான் புதியதாக மேலும் மூன்று மின் இணைப்புக்கோரி மனு செய்திருந்த விவரத்தை தெரிவித்தேன். தான் ஏற்கனவே கடந்த 12.01.2022 ஆம் தேதி ஒரு மின்இணைப்புக்கோரி மனு செய்திருந்ததுடன் சேர்த்து மொத்தம் நான்கு மின்இணைப்புகளையும் (Single Phase) வேண்டுமென்று தெரிவித்தேன். அதற்கு வணிக ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்கள் நான்கு மின்இணைப்புகளுக்கும் அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணம்போக ஒவ்வொரு மின்இணைப்பிற்கும் தனியாக தலா ரூ.6,000/- வீதம் தனக்கு தரவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அவ்வளவு பணம் தன்னிடம் இல்லை என்று கூறியபோது. அதற்கு அவர் தான் ஏற்கனவே ஒரு மின்இணைப்பிற்கு அரசுக்கு செலுத்தவேண்டிய கட்டணம் செலுத்திய அந்த ஒரு மின் இணைப்பை மட்டும் முதலில் பரிந்துரை செய்து வாங்கி தருவதாகவும். அதற்கு தான் ஏற்கனவே தெரிவித்திருந்தபடி தனக்கு பணம் ரூ.6,000/- தரவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் என்னுடைய குடும்ப சூழ்நிலையை எடுத்து கூறிய பின் அவர் கேட்ட ரூ.6,000/-த்திலிருந்து ரூ.3,000/- குறைத்துக்கொண்டு 03.02.2022-ம் தேதி ரூ.3,000/- யுடன் வந்து தனது அலுவலகத்தில் தன்னை வந்து சந்தித்து தருமாறும். பின்னர் நான் பரிந்துரை செய்து மின்இணைப்பு வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்று தெரிவித்தார். எனக்கு மின் இணைப்பு வழங்க வணிக ஆய்வாளர் திரு.சிவக்குமார் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,000/-த்தை கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால். நான் இன்று 03.02.2022 ஆம் தேதி காலை 09.30 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்திற்கு அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூபாய்.3,000/- உடன் வந்து இப்புகார் மனுவை அளிக்கிறேன். எனவே நான் புதிதாக கட்டிய வீட்டிற்கு மின்இணைப்பு வழங்க லஞ்சம் கேட்ட வணிக ஆய்வாளர் திரு.சிவக்குமார். பேரம்பாக்கம் மின்சார அலுவலகம் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் S.சசிகுமார்.) 03/02/2022.

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2022/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

Honoured Sir, I received the above complaint on 03.02.2022 at 09.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, enquiry conducted in a discreet manner. Based on the outcome of the Discreet enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tr.Sivakumar, Commercial Inspector, O/o. The Assistant Engineer, TANGEDCO, Perambakkam, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.01/AC/2022/TVL, u/s 7 of The Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018) on 03.02.2022 at 10.30 hrs. The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Thiruvallur. Copies send to Officers concerned and took-up the investigation.

3/2/2022

IC INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.